1991 சனவரி 23]

என்று அந்தத் துறையினர் என்னிடத்தில் தெரிவித்து ஒப்புதல் அளிக்கிறார்கள். எனவே, இப்படி அதிகச் செலவு வளர்ந்து கொண்டே இருக்கிற காரணத்தினால், சிறப்பாக ஏதாவது செலவழிக்க முடியுமே தவிர அதற்கு மாதந்தோறும் செலவழிக்கிற சூழ்நிலை நிச்சயமாக ஏற்பட முடியாது. எப்போதாவது பழுது ஏற்பட்டால்தான் அவர்களுக்கு வேலை வருகிறது. தினமும் காலையில் அந்தத் தண்ணீர் தொட்டியை நிரப்ப பம்பை இயக்குகிறார்கள். அப்புறம் மறுபடியும் தண்ணீர் தேவைப்படும் போது மட்டும்தான் இயக்குகிறார்கள். எனவே அது ஓர் உப வேலைதான். இதற்காக நிரந்தரமாக அதிகம் செலவழிக்கச் செய்து பஞ்சாயத்துக்களுடைய பளுவை உயர்த்த முடியாது.

திரு. எஸ். காதர் பாட்சா என்கிற வெள்ளைச்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊராட்சிகளுடைய நிர்வாகத்தில் இருக்கிற மேல்நிலை நீர்த் தொட்டிகளுக்கு நீரேற்ற மாதந்தோறும் ஏற்படுகிற மின்சாரச் செலவுகளைக் கூட கட்ட இயலாத நிலையில் இந்த ஊராட்சிகள் மிகவும் பொருளாதாரத்தில் சீர்கெட்டு இருக்கின்றன. அப்படிப்பட்ட ஒரு நிலைமை தமிழகத்தில் பெரும்பாலான ஊராட்சிகளில் இருக்கிற காரணத்தினாலே ஊராட்சி ஒன்றியத்தினுடைய பொது நிதியிலிருந்து அந்த மின்சாரக் கட்டணத்தைக் கட்டுவதற்குரிய வகையில் செயற்குறிப்பு அரசிடம் ஏதாவது இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாகக் கூட அரசு உத்தரவு போடவில்லை. எங்கெங்கு அப்படிப்பட்ட சூழ்நிலை ஏற்படுகிறதோ நிச்சயமாக தண்ணீர் வழங்குகிற நிலை தவிர்க்கப்படாமல் இருப்பதற்கு அந்த ஒன்றியம் அந்தச் செலவினை ஏற்றுக்கொண்டு செய்வதற்கு வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. அப்படி மீறி எந்த ஒன்றியத்திலும் பணம் இல்லையென்றால் மாவட்ட முகமை அதற்கான உதவியைச் செய்வதற்கு ஆணைகள் வழங்கப்பட்டிருக்கிறது.

விழுப்புரம் நகரப் பேருந்து நிலையத்தை மாற்றி அமைத்தல்.

*9655—திரு. ச. அழகுவேலு :

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) விழுப்புரம் நகரப் பேருந்து நிலையம் மாற்றி அமைக்கப்படுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது மாற்றப்படும் ?

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) விழுப்புரம் நகரின் தெற்கில் திருச்சிராப்பள்ளி தேசிய நெடுஞ்சாலையில் பூந்தோட்டம் கிராமம் புல எண் 219-ல் 6.25.0 ஹெக்டேர் அரசு ஏரி புறம்போக்கு நிலத்தை நீண்டகால குத்தகை அடிப்படையில் விழுப்புரம் நகராட்சி பெற்றிருக்கிறது. அதிலே பேருந்து நிலையத்திற்குத் திட்டம் இடப்பட்டிருக்கிறது. விரைவில் வேலை முடிக்கப்படும்.

மேட்டூர் கால்வாய்களைப் புதுப்பித்தல்.

*5909—**திரு. க. பழனிசாமி :**

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

மேட்டூர் இடதுகரை, வலதுகரை கால்வாய்களைப் புதுப்பிக்க, தூர் எடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவரவர்களே, பராமரிக்க மற்றும் பழுதுபார்க்க வருடந்தோறும் அரசினால் ஒதுக்கப்படும் நிதிநிலைக்குத் தக்கவாறு பணிகள் மேற்கொள்ளப்பட்டு செய்து முடிக்கப்பட்டு வருகின்றன.

சபரி அணையைப் புதுப்பிக்கும் திட்டம்.

*9288—**திரு. கே. சுப்பிரமணியப்பிள்ளை :**

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில் அருகே பழையாற்றின் குறுக்கே உள்ள சபரி அணை தற்சமயம் பழுது ஏற்பட்டு கசிவு ஏற்பட்டுள்ளதால் இந்த அணையை புதுப்பிக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது புதுப்பிக்கப்படும் ?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவரவர்களே,

(அ) சபரி அணையில் கசிவுகள் அடைக்கும் பணிகள் பராமரிப்புப் பணியின் கீழ் தற்போது செய்யப்பட்டுள்ளன. இவ்வணையை மேம்படுத்தும் பணிகள் தேசிய நீர் மேலாண்மை